<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

**<u>10.02.2026</u>**

OS. No. 33/2011

பக்கம் – 6

PW1 – சேஷாசலம்

**<u>பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்தாகும். கூட்டு குடும்ப சொத்தினை என்னுடைய தந்தையும் சித்தப்பாவும் 1997ம் ஆண்டு பாகம் பிரித்துக் கொண்டார்கள். அது வாய் மூலமாக பாகம் பிரித்துக் கொண்ட காரணத்தினால் ஆவணம் ஏற்படுத்தவில்லை. அதனடிப்படையில் என்னுடைய தந்தைக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகளுக்கு வருவாய் ஆவணங்களில் பட்டா உட்பட அவரது பெயர் மாற்றப்பட்டது. பட்டா தனிப்பட்டாவாக தான் என்னுடைய தந்தைக்கு வழங்கப்பட்டது. என்னுடைய தந்தை உயிருடன் இருக்கும்போது பாகப் பிரிவினை பத்திரம் ஏற்படுத்தினாரா என்றால் உயில் தான் ஏற்படுத்தினார். உயில் ஆவணத்தில் என்னுடைய தந்தையின் வாரிசுகள் அனைவருக்கும் தனித்தனியாக சொத்துக்கள் ஒதுக்கி எழுதினாரா என்றால் முதல் வாதிக்கும் 4 மற்றும் 5 பிரதிவாதிக்கும் கூட்டாக சொத்தினையும் இதர நபர்களுக்க அவரவர் தேவைக்கு ஏற்ப எழுதி வைத்துள்ளார். அந்த உயில் ஆவணப்படி முதல் வாதியும் 4 மற்றும் 5 பிரதிவாதிகளும் தனித்தனியாக பாகம் பிரித்துக் கொண்டார்களா என்றால் அவரவர் தனித்தனியாக பயிர் வைத்து அனுபவித்து வருகிறார்கள். அந்த உயில் நடைமுறைக்கு வாராத காரணத்தினால் தான் முதல் வாதி அரவருடைய காலத்தில் பாகப் பிரிவினைக்காக வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்